


சென்னை , கற்பக வினாயகா மருத்துவக் கல்லூரி விழாவில் . சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, "புதியதோர் உலகு செய்வோம் எனும் தலைப்பில் , கழக இலக்கிய அணி துணைத் தலைவர் . சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் . கவிச்சுடர் கவிதைப்பித்தன் உரையாற்றினார், நிகழ்வில் . கற்பக வினாயக கல்லூரியின் மேலாண்மை இயக்குநர். கழக மருத்துவரணி துணைச் செயலாளர் . எஸ். ஆர்.அண்ணாமலை ரகுபதி , மற்றும் கல்லூரி முதல்வர், பேராசிரியர் பெருமக்கள் மாணவ மாணவிகள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### தமிழ்நாட்டின் புதிய தலைமைச் செயலாளராக

# சிவ்தாஸ் மீனா நியமனம்!

சென்னை, ஜூலை 1 -

தமிழ்நாட்டின் புதிய தலைமைச் செயலாளராக சிவ்தாஸ் மீனா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் பிறந்த சிவ்தாஸ் மீனா 1989-ஆம் ஆண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரியானார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் இறையன்பு நேற்றுடன் ஓய்வு பெற்றார். இதையடுத்து தமிழ்நாட்டின் அடுத்த தலைமைச் செயலாளர் யார்? என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது.

இந்நிலையில் அரசின் புதிய தலைமைச் செயலாளராக சிவ்தாஸ் மீனா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் வரை பணியில் நீடிப்பார்.

நகராட்சி நிர்வாகம்-நீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலாளராக



இருந்த சிவ்தாஸ் மீனா தற்போது தலைமை செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

### பணியிலிருந்து ஓய்வுபெறும்

# டி.ஜி.பி. சைலேந்திரபாபுக்கு பாராட்டு விழா!

## அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா தலைமை!

சென்னை, ஜூலை 1 -

தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் காவல் துறை படைத்தலைவர் முனைவர் சைலேந்திரபாபு 30.06.2023 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறுவதை யொட்டி 28.06.2023 அன்று அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் பிரிவு உபசார விழா அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு வாழ்த்துடன் இவ்விழா இனிதே தொடங்கியது. சென்னை உயர்நீதி மன்ற அரசு கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் எம்.பாபு முத்துமீரான் வரவேற்புரை ஆற்றினார்.

இவ்விழாவில் காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் சங்கர் ஜிவால், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்து உரையாற்றியானர். மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா தமது தலைமை உரையில் காவல்துறை தலைமை இயக்குநராக பதவியேற்றபின் மரியாதை நிமித்தமாக தன்னை சந்தித்ததை நினைவு கூர்ந்தார். அதே போன்று சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் அவர்களும் பதவியேற்றதும் தன்னை மரியாதை நிமித்தமாக வந்து சந்தித்ததை எடுத்துரைத்தார். ஆனால் பெரும்பாலான காவல் துறை உயர் அதிகாரிகள் அரசு குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகம் வருவதையும், நீதிமன்றங்களுக்கு வருவதையும் கவுரவக் குறைச்சலாகக் கருதுகிறார்கள்.

இந்திய காவல்துறை பணி, இந்திய ஆட்சியர் பணி போன்றதல்ல. காவல் துறை பணி, நீதிமன்றங்களுடன் நெருங்கிய தொடர்புடைய ஒன்று. நீதித்துறை தொடர்பின்றி காவல் துறை செயல்பட முடியாது. எனவே, நீதிமன்றம் வருவது குறித்து காவல்துறை அதிகாரிகள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அரசு குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகமும் நீதிமன்றமும் நீதியை நிலைநாட்டிடத்தான் உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். காவல் துறை தலைமை இயக்குநர் அவர்கள் பதவியேற்றவுடன், காவலர்கள் அனைவரும் பொதுமக்களிடம் அன்புடனும் பணிவுடனும் நடந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்வேன் என்று தெரிவித்தார்கள். இதற்காக முனைப்புடன் செயல்பட்டார்கள். குற்றவாளிகள் மட்டும் தான் காவல் நிலையம் செல்ல அஞ்ச வேண்டும். பொது மக்கள் அல்ல. எனவே காவல் துறை "பொதுமக்களின் நண்பன்" என்ற இலக்கை அடைய பொதுமக்கள் காவல் நிலையங்களுக்கு அச்சமில்லாமல் செல்லும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இதற்கான முயற்சியில் இனி வரும் அதிகாரிகளும் முனைப்புடன் செயல்படவேண்டும்.

ஒரு வழக்கில் விசாரணை சரியான முறையில் நடத்தப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி சென்னை உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் 90 விழுக்காடு காவல்துறையினர் ஊழல் வாதிகள் என்று கருத்து தெரிவித்தது. உடன் காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள் அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு காவல் துறையினர் இதனால் மனதளவில் மிகவும் பாதிப்பு அடைந்துள்ளார்கள் என்று தெரிவித்தார். இவ்வலுவலகம் உடன் செயல்பட்டு நீதிமன்றம் மூலம் காவல்துறைக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைத்தது. காவல்துறைக்கு களங்கம் என்றவுடன் உடனடியாக அதனை களைந்திட செயல்பட்டவர் முனைவர் சைலேந்திர பாபு.

சென்னை உயர்நீதி மன்ற அமர்வு நீதிபதிகள் காவல் துறையில் கடுங்குற்றங்களை விசாரணை செய்ய தனிப்பிரிவு அமைக்க வேண்டும் எனவும் தொடர்ந்து இது கண்காணிக்கப்படும் எனவும் கருத்து தெரிவித்தார்கள். உடன் காவல் துறை தலைமை இயக்குநர் உரிய முயற்சிகளை எடுத்து பல காவல்நிலையங்களில் தனிப்பிரிவுகளை உருவாக்கினார். சென்னை உயர்நீதிமன்றமும் இதற்காக காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களை வெகுவாக பாராட்டியது. இவ்விழாவின் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்ட காவல் துறை தலைமை இயக்குநர் முனைவர் சைலேந்திர பாபு, தனது உரையில் குற்றவியல் வழக்குரைஞர்களும் காவல்துறையினரும் ஒன்றுபட்டு நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார். இவர்களது உறவு பிணைக்கப்பட்ட, பிரிக்க இயலாத ஒன்று என்று வலியுறுத்தினார். சமூக ஊடகங்களின் எதிர்மறை செயல்களை விரிவாக எடுத்துரைத்து இதனால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதை விளக்கிக் கூறினார்.

இதில் சம்பந்தப்பட்ட யூடியூப் சானல் நடத்தும் ஒருவருக்கு பெயில் கிடைத்ததை ரத்து செய்ய உச்சநீதி மன்றம் வரை சென்று போராடியதை எடுத்துரைத்து மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அவர்களை வெகுவாக பாராட்டினார். இறுதியாக அரசு கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் ராஜகுமார் நன்றியுரை வழங்கினார்.

இவ்விழாவில் அரசு கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள் பாபு முத்து மீரான், திருமதி. ஜி.வி. கஸ்துhரி, ஆர். முனியப்பராஜ், கோகுலகிருஷ்ணன், எ.தாமோதரன், இ.ராஜ்திலக், திரு,எஸ்.சுகந்திரன் மற்றும் எஸ்.ராஜகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் எல்.பாஸ்கரன், எஸ். வினோத்குமார், வி.ஜே.பிரியதர்ஷனா, ஜே.சுப்பையா, எ.கோபிநாத், சி.ஈ.பிரதாப், என்.எஸ்.சுகந்தன், ஆர். வினோத்ராஜா, எஸ்.சந்தோஷ், ஆர்.கிஷோர் குமார், லியோநார்டு அருள் ஜோசப் செல்வம், என். முத்துவேல், ஆர்.மூர்த்தி, வி.மேகநாதன், எஸ்.பாலாஜி மற்றும் எஸ்.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட

# 51 கடைகளின் உரிமையாளர்களுக்கு 25 இலட்சத்து 50 ஆயிரம்!

## க.செல்வராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருப்பூர், ஜூலை 1 -

திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 51 கடைகளின் உரிமையாளர்களுக்கு ஆறுதலாக தனது சொந்த நிதியிலிருந்து ஒரு கடைக்கு 50 ஆயிரம் வீதம் 51 கடைகளுக்கு 25 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்க பணத்தை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வழங்கினார்.

மக்கள் நலன் காக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்றும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை நிரூபிக்கும் வகையில் திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 51 கடைகளின் உரிமையாளர்களுக்கு ஆறுதலாக தனது சொந்த நிதியிலிருந்து ஒரு கடைக்கு 50 ஆயிரம் வீதம் 51 கடைகளுக்கு 25 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்க பணத்தை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் திருப்பூர் தெற்கு மாநகரக் கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி துணை ரா.பாலசுப்பிர மணியன், மாவட்ட துணை செயலாளர் டிஜிட்டல் எஸ்.சேகர், பொதுக்குழு உறுப்பினர் சலீம் (எ) அப்துல் ரகுமான், செ.திலகராஜ், பகுதி கழக செயலாளர்கள் மியாமி ஆ. அய்யப்பன், மு.க.உசேன், மாமன்ற உறுப்பினர், கல்விக்குழு தலைவர் பெ.திவாகரன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் ச. தியாகராஜன்

### ஜூலை 1 (2006)



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தளகர்த்தர்களான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்

நாகை நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1965–ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகு குழாம் வளாகத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் பிரம்மாண்டமான இரண்டு அடுக்கு மிதக்கும் உணவக கப்பலின் கட்டுமான பணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில்

# மிதக்கும் உணவகக் கப்பல் அமைக்கும் பணி!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, ஜூலை 1 -

ரூ.5 கோடி மதிப்பீட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் பிரம்மாண்டமான மிதக்கும் உணவக கப்பல் அமைக்கும் பணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகு குழாம் வளாகத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் பிரம்மாண்டமான இரண்டு அடுக்கு மிதக்கும் உணவக கப்பலின் கட்டுமான பணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (29.06.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் படகு இல்லம் இயக்கப்பட்டு வருகின்றது. இந்த படகு இல்லத்தில் பொதுமக்கள் சாகச பயணம் மேற்கொள்ளும் வகையில் மிதவை படகுகள், இயந்திர படகுகள், வேகமான இயந்திர படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தர வைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த படகு இல்லத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் பிரம்மாண்டமான இரண்டு அடுக்கு மிதக்கும் உணவக கப்பல் பயணம் தொடங்கப்பட உள்ளது.

இத்திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் கொச்சியைச் சேர்ந்த கிராண்ட்யூனர் மரைன் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் மூலமாக தனியார் மற்றும் பொதுபங்களிப்பு திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 5.00 கோடியாகும். தமிழ்நாட்டில் முதல் முறையாக மிதவை உணவக கப்பல் (Floating Restaurant) அமைக்கப்படுகிறது.

இந்த மிதக்கும் உணவகத்தின் தரைத்தளம் முழுவதும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் அமைக்கப்பட உள்ளது. முதல் தளம் திறந்தவெளி தளமாகவும், சுற்றுலா பயணிகள் மேல் தளத்தில் அமர்ந்து உணவு உண்டு பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் சமயலறை, சேமிப்பு அறை, கழிவறை மற்றும் இயந்திர அறை (மோட்டார் இன்ஜின்) அமைக்கப்பட உள்ளது. இந்த மிதவை கப்பல் 60 குதிரை சக்தி திறனுடைய இயந்திரம் மூலம் இயக்கப்படும் வகையில் வடிவமைக்கப் பட்டு உள்ளது. இரண்டு அடுக்கு மிதவை உணவக கப்பலின் நீளம் 125 அடியும், அகலம் 25 அடியும் கொண்டதாக உருவாக்கப்பட்டு வருகின்றது.

மிதவை உணவகக் கப்பல் அமைக்கும் பணி 24.03.2023 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. தற்போது உணவகக் கப்பல் அமைக்கும் பணியின் கட்டுமானத்தின் முக்கிய மான தான அடிப்பகுதி, மற்றும் படகு உருவத்தை வழங்கும் அடிப்படை கட்டுமான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. இதனைத் தொடர்ந்து சுற்றுலா பயணிகள் பயன்படுத்தும் தரைத்தளம் மற்றும் முதல் தளம் அமைக்கும் பணிகள் நடைபெற உள்ளன.

ஆய்வு செய்த பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை அனைத்து துறைகளிலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கி வருகின்றார்கள். பிரதமர் அவர்கள் இந்தியாவின் முன்னேற்றத்தில் தமிழ்நாடு இன்ஜினாக உள்ளது என்று பாராட்டியுள்ளார். தமிழ்நாடு சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக விளங்குகின்றது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தமிழ்நாட்டில் 9 இடங்களில் படகு குழாம்கள் செயல்பட்டு வருகின்றன.

செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 2022-ஆம் ஆண்டில் 74,19,516 சுற்றுலா பயணிகள் வருகை தந்த நிலையில் இந்த ஆண்டு 2023 மே மாதம் வரையிலான 5 மாதத்தில் மட்டும் 58,74,010 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள். செங்கல்பட்டு மாவட்டத்தில் முக்கிய சுற்றுலா தலமாக முட்டுக்காடு படகு குழாம் விளங்குகின்றது. மிதவை உணவக கப்பல் பணிகள் முடிவடைந்தவுடன் அதிக சுற்றுலா பயணிகள் வரும் வாய்ப்பு உருவாகியுள்ளது. சென்னை மக்களின் முக்கிய சுற்றுலா தலங்களாக முட்டுக்காடு மற்றும் முதலியார்குப்பம் படகுகுழாம்கள் விளங்குகின்றன. தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக இத்தகைய மிதவை உணவக கப்பல் இங்கு அமைக்கப்படுகின்றது. இதேபோன்று கோவை வாலங்குளம், ஊட்டி உள்பட 4 இடங்களில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு அமுதகம் உணவகங்களின் மூலமாக சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சுவையான உணவுவகைகளை வழங்குவதற்காக, சமையல் கலை வல்லுநர் தாமு தலைமையில் அமுதகம் உணவகங்களின் உணவு தயாரிப்பு பணியாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் இதயவர்மன், முட்டுக்காடு ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.சங்கீதா மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொது மேலாளர் திருமதி.லி.பாரதி தேவி, கிராண்ட்யூனர் மரைன் இன்டர்நேஷ்னல் நிறுவ னத்தினர் உள்பட அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர்

# எடையூர் ந.உ.சிவசாமி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர், ஜூலை 1 -

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றியம் எடையூரை சேர்ந்த தலைமை செயற்குழு முன்னாள் உறுப்பினர் ந.உ.சிவசாமி அவர்கள் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 85.

கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரான மறைந்த ந.உ.சிவசாமி அவர்கள் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் கழகப்பணிகளால் தலைவர் கலைஞர் உள்ளிட்ட அனைவரின் அன்பை பெற்றவராவார். இவர் முத்துப்பேட்டை ஒன்றிய கழகத்தில் 6 முறை ஒன்றிய செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

மேலும் கழக தலைமைச் செயற்குழு , பொதுக்குழு உறுப்பினராகவும், எடையூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும், எடையூர் அரசு பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் 35 ஆண்டுகள் தலைவராகவும் பொறுப்பு வகித்து, வகித்த பொறுப்புகளுக்கெல்லாம் தனது செயல்பாடுகளால் பெருமை சேர்த்தவராவார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், இனமான பேராசிரியர் உள்ளிட்ட கழக முன்னோடிகளை இந்த பகுதி கூட்டங்களில் பங்கேற்க செய்தும், 2001-ல் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் முத்துப்பேட்டை எம். எஸ்.கார்த்தியுடன் இணைந்து இடும்பாவனத்தில் இரண்டு நாள் தொடர்ச்சியாக பிரமாண்ட இளைஞர் அணி பயிற்சி பாசறை கூட்டம் நடத்தியும் இந்த பகுதியில் கழகம் வளர்த்திட அரும்பாடுபட்டவர் என்பதும், தனது வாழ்நாளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சீர்திருத்த திருமணங்களை செய்து வைத்து சுயமரியாதை சிந்தனையை மக்கள் மத்தியில் வளர்த்தவர் ந.உ.சிவசாமி என்பதும் குறிப்பிடத்தக்கது. முத்துப்பேட்டை ஒன்றிய பகுதியில் அரசியல் பாகுபாடின்றி அனைவரிடமும் அன்போடு பழகியவர் .

மறைந்த ந.உ.சிவசாமிக்கு துரையரசன், மாதவன் என்கிற இரண்டு மகன்களும், ராஜா மணி என்கிற மகளும் உள்ளனர். மருமகள் தேவகி முத்துப்பேட்டை ஒன்றியகுழு உறுப்பினராக உள்ளார்.

அன்னாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், ஒன்றிய செயலாளர் இரா.மனோகரன், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ். கார்த்திக், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன், பேரூராட்சி தலைவர் மும்தாஜ் நவாஸ்கான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ந.உ.சிவசாமி உடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

### மணிப்பூர் கலவரம்: ஒன்றிய அரசைக் கண்டித்து

# கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் ஆர்ப்பாட்டம்!

## இனிகோ இருதயராஜ் தலைமை! அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 1 -

மணிப்பூர் கலவர விவகாரத்தில் ஒன்றிய அரசை கண் டித்து கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே கடந்த 26ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு அமைப்பின் தலைவர் இனிகோ இருதயராஜ் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு மாநில சிறுபா ன்மையினர் ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தி.மு.க.செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன். காங்கிரஸ் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சசிகாந்த் செந்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணை பொதுச்செயலாளர் எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநிலக்குழு உறுப்பினர் சின்னதுரை, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில துணை செயலாளர் வீரபாண்டியன், ம.தி.மு.க. முதன்மை செயலாளர் துரை வைகோ, மனிதநேய மக்கள் கட்சிதலைவர் ஜவாஹிருல்லா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி துணைத்தலைவர் நவாஸ்கனி, தமிழக வாழ்வுரிமை கட்சி துணை பொதுச்செயலாளர் சத்ரியன் வேணுகோபால், மக்கள் கண்காணிப்பகம் ஆசீர், ஒருங்கிணைப்பாளர் செங்கை மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் நீதிநாதன், தென்னிந்திய திருச்சபை பேராயர் ஜார்ஜ் ஸ்டீபன், சென்னை மயிலை உயர் மறை மாவட்ட முன்னாள் பேராயர் சின்னப்பா உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய தலைவர்கள், பேராயர்கள் அனைவருமே மணிப்பூரில் மதக் கலவரத்தை பா.ஜ.க. நடத்தி வருவதாகவும், பா.ஜ.க.வுக்கு நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் சரியான தீர்ப்பை வழங்கவேண்டும் என்றும் கருத்துகளை முன் வைத்தனர்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட மாநகர தொழிலாளர் அணி சார்பாக, மார்க்கெட் மண்டி தொழிலாளர்களுக்கு தலைவர் கலைஞர் முகம் பொறித்த ஆடைகள் மற்றும் மளிகை தொகுப்பு வழங்கும் விழாவினை மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் வழிகாட்டுதல்படி, திருச்சி தையல்கார தெரு கீர்த்தனா திருமண மண்டபத்தில், மாவட்ட அமைப்பாளர் ஜே.ஜே. மகேஷ் மற்றும் மாநகர அமைப்பாளர் ஏ.பி. ரகுநாதன் தலைமையில் நடைபெற்றது. மார்க்கெட் மண்டி தொழிலாளர்களுக்கு தலைவர் கலைஞர் முகம் பொறித்த ஆடை மற்றும் மளிகை தொகுப்பை மாநில தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ் வழங்கி தனது வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டார். இந்த நிகழ்வில் மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், மாவட்டத் துணைச் செயலாளர் அ.த.த. செங்குட்டுவன், பகுதி கழகச் செயலாளர் ஆர்.ஜி.பாபு, எம்.ஆர்.மாயழகு, மற்றும் தொழிலாளர் அணி மாவட்ட மாநகர நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.